DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 8/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | நடராஜன் **PW – 4** |
| Father's Name | காளி |
| Village | அணையேரி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 11/10/2023
**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாஷா என்பவரை தெரியும். அவர் எங்கள் ஊரில் மளிகை கடை வைத்துள்ளார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு அணையேரி மாதா கோவில் அருகே சிமெண்ட் கால்வாய் எங்கள் ஊர் தலைவர் ரவி என்பவர் போட்டு கொண்டிருந்தார், அதில் நான் வேலை செய்தேன். ஏழுமலை, பிரேமா, பாரூக் ஆகியோரும்வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது பகல் 01.00 மணிக்கு ஆஜர் எதிரி அய்யப்பன் என்பவர் அங்கு வந்து அ.சா.2 பாருக் என்பவரிடம் ஒரு மூட்டை சிமெண்ட் கேட்டார். அதற்கு பாரூக் சிமெண்ட் தரமுடியாது என்றும், கவுன்சிலர் ரவியிடம் சென்று கேட்குமாறும் எதிரியிடம் சொன்னார். அதற்கு எதிரி ஏன் சிமெண்ட் கொடுக்க வில்லை என்று சொல்லி கையால் பாரூக்கை அடித்து விட்டார். பின்னர் எதிரி கடப்பாரையை எடுத்து பாரூக்கை அடிப்பதற்கு ஓங்கினார். அதை பாரூக் தடுத்து விட்டார். அவ்வாறு தடுத்ததில் பாரூக்கிற்கு இடது கை மோதிர விரலில காயம் ஏற்பட்டது. பின்னர் எதிரி ரீப்பர் கட்டையை எடுத்து பாரூக்கின் மண்டை மீது அடித்து

விட்டார். அதனால் பாரூக்கிற்கு தலையில் ரத்த காயம் ஏற்பட்டது. பின்னர் பாரூக்கை நான், ஏழுமலை ஆகியோர் அனந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு முடியாது என்று சொல்லிவிட்டதால் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு பாரூக்கை அழைத்து வந்தோம். பின்னர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் பாண்டிச்சேரிக்கு சிகிச்சைக்காக பாரூக்கை அழைத்து சென்றார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை 2 நாள் கழித்து வந்து என்னை விசாரித்தார்கள். போலிசார் அணையேரி மாதா கோவில் அருகே வைத்து என்னை விசாரித்தார். அப்போது தலைவர் ரவி அங்கு இல்லை. சரவணன், ஏழுமலை, பொன்முடி, கணேசன் ஆகியோர் போலிசார் விசாரிக்கும்போது அங்கு இருந்தார்கள். அவர்களின் பெயர் விலாசம், ஆகியவற்றை போலிசார் எழுதி வாங்கி கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. என்னுடைய பெயர், விலாசம் வயது ஆகியவற்றை போலிசார் எழுதி கொண்டு சென்றார். என்னை பெண் உதவி ஆய்வாளர் விசாரித்தார். அதன் பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. போலிசார் சம்பவ தினத்தன்று சம்பவ யிடத்திற்கு வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்த அன்று போலிசார் சம்பவயிடத்திற்கு வரவில்லை. மறுநாள் வந்தார்கள். அப்போது என்னை விசாரித்தார்கள். பாரூக்கை அனந்தபுரம் அரசு மருத்துவமனையிலும், செஞ்சி அரசு மருத்துவமனையிலும், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையிலும் நான் தான் சேர்த்தேன். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு நான் செல்லவில்லை. செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்தபோது 04.00 மணியிருக்கும். நான் தி.மு.க. கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். ரவி என்பவர் தி.மு.க. கட்சியை சேர்ந்தவர். கால்வாய் வேலை ரவி என்பவரின் ஒப்பந்த வேலை என்றால் சரிதான். நாங்கள் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்தபோது எதிரியும் காயம் பட்டு சிகிச்சைக்காக செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்தார். கால்வாய் வேலையை சிமெண்ட் போடாமல் மணல் அதிகமாக சேர்த்து கால்வாயை கட்டியது குறித்து எதிரி கேட்டதற்கு அ.சா.2 எதிரியை அடித்து காயப்படுத்தி விட்டார்

என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியுடன் வந்து 4 நபர்களின் பெயரில் தெரியாது அவர்கள் அணையேரியை சேர்ந்தவர்கள். கவுன்சிலர் ரவி சொன்னதின்பேரில் எதிரி பாரூக்கை அடித்து விட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரி வழக்கு பதிவு செய்யவைத்து அதற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 8/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | பிரேமா **PW – 5** |
| Father's Name | மரியபிரகாசம் சார்லஸ் |
| Village | அணையேரி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 11/10/2023
Accused present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 பாஷா, அ.சா.2 பாரூக்கை என்பவர்களை தெரியும் நான் வேலை செய்யும் இடத்தில் பாரூக் என்பவர் சூப்பர்வைசர் வேலை செய்தார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். அணையேரி 11.09.2021ம்தேதி எங்கள் ஊர் மாதா கோவில் அருகே கால்வாய் ஜல்லி போடும் வேலை செய்து கொண்டிருந்தோம். என்னுடன் ஏழுமலை, நடராஜீ, ஆஜீரா ஆகியோர்கள் வேலை செய்தார்கள். அப்போது சுமார் பகல் 01.00 மணிக்கு ஆஜர் எதிரி அய்யப்பன் அங்கு வந்து பாரூக் என்பவரிடம் ஒரு மூட்டை சிமெண்ட் கேட்டார். அதற்கு பாரூக் சிமெண்ட் தர முடியாது, தலைவர் ரவியிடம் கேட்டு கொள்ளுங்கள் என்று எதிரியிடம் சொன்னார். அதற்கு எதிரி கையால், பாரூக்கை அடித்து விட்டார். அதனால் பாரூக் மயக்கமாகி விழுந்து விட்டார். பின்னர் இருவரும் சண்டை போட்டு கொண்டார்கள். அப்போது அங்கிருந்த ஆணி பிடுங்கும் (கவுபாரை எதிரி எடுத்தார். அதை பாரூக் பிடுங்கும்போது பாருக்கின் இடது கை மோதிர விரலில் காயம் ஏற்பட்டது. பின்னர் அங்கிருந்த ரீப்பர் கட்டையை

எதிரி எடுத்து பாரூக்கின் மண்டை மீது அடித்து விட்டார். அதனால் பாரூக்கிற்கு தலையில் ரத்த காயம் ஏற்பட்டது. பின்னர் நான் வைத்திருந்த துண்டால் பாரூக்கின் தலையில் கட்டினேன். பின்னர் பாரூக்கை நடராஜன் என்பவர் இருசக்கர வாகனத்தில் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலிசார் சம்பவம் சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவதினத்தன்று போலிசார் ஒரு மணி நேரம் கழித்து சம்பவம் குறித்து தெரிந்து சம்பவயிடத்திற்கு வந்தார்கள். போலிசார் விசாரிக்கும்போது பாருக்கின் தலையில் துண்டு கட்டி அனுப்பியதை குறித்து சொன்னேன். போலிசர் 3 நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள். பெண் காவல் அதிகாரி என்னை விசாரித்தார். அவர்தான் சம்பவ தினத்தன்று என்னை விசாரித்தார். போலிசாரிடம் பாரூக்கின் தலையில் கட்டிய துண்டை ஒப்படைக்கவில்லை, அதை தீயில் கொளுத்தி விட்டேன். இது குறித்து போலிசார் விசாரிக்கும்போது நான் சொல்லவில்லை. முதன் முதலில் இப்போதுதான் சொல்கிறேன். சம்பவ யிடத்தில் கம்பி, ஜல்லி, மணல் ஆகியவை இருந்தது. எதிரி சம்பவயிடத்திற்கு வந்து சிமெண்ட் நன்றாக போட்டு கட்டுங்கள் என்றும், மணலை மட்டும் போட்டு கட்டாதீர்கள் என்றும் சொன்னார் என்றால் சரியல்ல. எதிரி அவ்வாறு வந்து கேட்டபோது பாரூக் நீ யார் என்னிடம் கேட்பதற்கு என்று சொல்லி எதிரி அடித்தபோது கீழே விழுந்து பாரூக்கிற்கு தலையில் அடிப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் சம்பவத்தின் போது வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. ரவி என்பவர் தற்போது பஞ்சாயத்து தலைவராக உள்ளார் அவர் எந்த கட்சியை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், சம்பவ தினத்தன்று நான் வேலைக்கு செல்லவில்லை என்றாலும், தலைவர் ரவி சொன்னதின்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.